# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## துரித கற்றல் கையேடு தரம் :- 04
## தமிழ்

❖ "ஆற்றங்கரையும் அரசமரமும்" என்ற கதையை வீட்டில் உள்ள பெரியவர்கள் இரசனையுடன் வாசித்துக் காட்டுங்கள்.

### ஆற்றங்கரையும் அரசமரமும்

மரங்கள் அடர்ந்த ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டின் இடையே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றங் கரையில் ஒரு பெரிய அரசமரம் நின்றது.

ஆற்றிலிருந்து தொலைவில் நின்ற மரங்களுக்கெல்லாம் மழை பெய்யும்போதுதான் ஏராளமான நீர் கிடைக்கும். மற்றைய காலங்களில் அவை தரையில் மிக ஆழத்திற்குத் தங்கள் வேரை நீட்டி, அங்குள்ள ஈரத்தைத்தான் இழுத்துக் கொள்ள வேண்டும்.

ஆற்றங்கரையில் இருந்த அரசமரத்திற்கோ ஆண்டு முழுவதும் தண்ணீருக்குக் குறைவில்லை. வண்டல் கலந்து வந்த நீர் அரசமரத்திற்கு வலிவையும் பொலிவையும் கொடுத்தது. அரசமரம் அகன்று பெருத்து வானுறவோங்கித் தலைநிமிர்ந்து பூரிப்பாக நின்றது.

அரசமரம் மற்றைய மரங்களைப் பார்த்து "நான் உங்களுக்கெல்லாம் தலைவன்!" என்று கூறியது.

மற்றைய மரங்கள் பேசாதிருந்தன. ஆற்றின் வளத்தால் அதிக நலம் பெற்ற அரசமரம் அகங்காரத்தோடு பேசுவதை அவற்றால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏற்றுக் கொள்ளாமலும் இருக்க முடியவில்லை. ஆகவேதான் அவை பேசாமல் நின்றன.

ஒருநாள் எங்கோ தொலைவில் உள்ள ஒரு மலையில் மழை பொழிந்தது. தொடர்ந்து பெருமழை பெய்தபடியால் ஆறு பெருக்கெடுத்தது.

வெள்ளம் பெருகி ஓடி வரும் ஆறு, தன் வேகத்தால் வழி நெடுகிலும் கரையை அரித்துக் கொண்டே வந்தது. அரசமரம் இருந்த இடமும் அரிப்பெடுத்துக் கரைந்துவிட்டது.

மண் கரையக் கரைய அரசமரத்தால் வேரூன்றி நிற்க முடியவில்லை. அப்படியே ஆற்றுக்குள் சாய்ந்தது. வெள்ளம் அரசமரத்தையும் அடித்துக்கொண்டு சென்றுவிட்டது.

"ஆற்றங்கரை வாழ்வு அவ்வளவுதான்!" என்று கூறி மற்றைய மரங்கள் அரசமரத்திற்காகப் பரிதாபப்பட்டன.

❖ இக்கதையை சித்திரமாக வரையுங்கள்

❖ கதையை மீண்டும் வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஆற்றங்கரையில் இருந்த மரம் எது?

   ……………………………………………………………………………………

2. எவ்வாறான நீர் அரச மரத்திற்கு வலிவையும் பொலிவையும் கொடுத்தது?

   ……………………………………………………………………………………

3. அரச மரம் அகங்காரத்தோடு என்ன கூறியது?

   ……………………………………………………………………………………

4. இக் கதை உமக்கு உணர்த்தும் படிப்பினை என்ன?

   ……………………………………………………………………………………

விகடத் துணுக்கு

“அப்பா, நான் இன்று பன்னிரண்டு மணி வரை படிக்கப் போகிறேன்..”

“நல்லது. எப்பொழுது நீ ஆரம்பிக்கப் போகிறாய்? ”

“பதினொன்று ஐம்பத்தைந்திற்கு!.”

